ஜூலை மாதச் சிந்தனைகள்



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## 2022



PUBLISHED BY
COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS-INDIA

தெலசால் அருட்சகோதரர்கள்
இந்திய மறைப்பணித்தளம்

## சிந்தனை தொகுப்பாளர் உரை

உரோமையர் கடிதம் 14:12ல் கூறுவதுபோல் நாம் அனைவருமே கடவுளிடம் கடன்பட்டவர்களே, நாம் ஒருநாள் இறைவனிடம் கணக்கு கொடுக்க வேண்டும்.

நமது தந்தை தெலசால் கூறுவதைப்போல நாம் நமது ஜெபம் வாழ்வு, பணி வாழ்வு, நம்மிடையே ஒப்படைக்கப்பட்ட அனைவரின் மீதும் நாம் காட்டும் அக்கறை நாம் பயன்படுத்தும் வார்த்தைகள் நம்மை சுற்றியிருப்பவர்களின் மீது நாம் காட்டும் மனிதாபிமான செயல்களைப்பற்றி கணக்கு கொடுக்க வேண்டும்.

ஆகவே, இம்மாத சிந்தனைகள் அனைத்தும் நமது சகோதர வாழ்வை மையம் கொண்டதாகவும், மேலும் இயேசுவின் உவமைகளை நமது பணிவாழ்வோடு இணைத்தும் சிந்திக்க அழைக்கின்றன.

இம்மாதத்தின் லசாலிய சிந்தனை – தாழ்ச்சி

அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC -அசாம்



லசாலிய அழைப்பு என்பது வகுப்பறையே ஆலயமாக, மேஜையே பலிபீடமாக ஆசிரியரே பலிப்பொருளாகக் கொண்டு இளைஞர்களுக்கு அறிவையும், ஞானத்தையும் அளிக்கும் **ஒரு தியாக வாழ்வு**

# லசாலிய இறையழைத்தல்

## கல்விப் பணிக்கு இறைவன் அழைக்கிறார்

## வந்து பாருங்கள்

(யோவான் 1: 39)

தொடர்புக்கு
இறையழைத்தல் இயக்குநர்,
தெலசால் சபை அருட்சகோதரர்கள்,
புனித மிக்கேல் அருள் தென்றல்,
தேனி சாலை, நாகமலை,
மதுரை – 625 019,
தொலைபேசி : 9363518327





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்கே மருத்துவர் தேவை என்ற இயேசுவின் வார்த்தை அவருடைய நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. அவர் அனைவருக்குமானவர். இங்கு நோயுற்றவராக வாழும் அனைவரையும் இயேசு நேசிக்கிறார். நேர்மையானவர் எவரும் இல்லை. நாம் அனைவருமே பாவம் என்ற வியாதியை பல வடிவிலே சுமந்து கொண்டு இருக்கின்றோம்.

இதோ இன்று இயேசு நம் அனைவரையும் குணப்படுத்தும் வாழ்வினை வாழ அழைக்கிறார். நாம் செய்த தவறுகளையும், குற்றங்களையும் மனம் திறந்து இறைவனிடம் கூறுவோம். அவரே நமது மன வியாதிகளைப் போக்கும் நல்ல மருத்துவர்.

**ஜெபம் :**

அனைவரும் நல்வழியில் வாழ மண்ணுலகம் வந்த எங்கள் இயேசுவே இன்றைய பல்வேறு சோனைகளாலும் மனப்பாதிப்புகளாலும் நோயுற்று வாழும் எம் அனைவருக்கு நல்ல மருத்துவராக எம்மிடையே எழுந்தருளும். நாங்களும் பிறருக்கு எங்களுடைய பரந்த மனதினால் எம்மிடம் வருபவர்களை குணப்படுத்தும் உள்ளங்களாக வாழ அருள்தாரும். ஆமென்.

முதல் வாசகம்
ஆமோஸ் 8:4-6, 9-12

பதிலுரைப்பாடல்
திபா. 119:2,10,20,30,40,131

நற்செய்தி
மத்தேயு 9:9-13

புனித ஜுனியர் செர்ரா

ஜுலை 2022

# 01

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, உன்னுடைய சகோதரனை மரியாதரையுடன் நடத்துவதுபோல் அனைவரையும் மரியாதையுடன் நடத்துங்கள் (கடிதம் 41)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
ஆமோஸ் 9:11-15

பதிலுரைப்பாடல்
திபா. 85:8, 10-11, 12-13

நற்செய்தி
மத்தேயு 9:14-17

புனித பரோசசஸ் மற்றும் மார்டினியன்

ஜுலை 2022

**02**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

இன்றைய முதலாம் வாசகமானது ஆமோஸ் இறைவாக்கினர் வழியாக இறைவனின் நம்பிக்கை தரும் வார்த்தைகளை நமக்கு காட்டுகின்றது.

இறைவன் தன்னை நம்பிய மக்களை கைவிடுவதுமில்லை, விட்டு விலகுவதுமில்லை, நாம் அனைவரும் விசுவாசத்தின் மக்களாக வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம் பழமை என்ற எண்ணத்தில் வாழாமலும், பழக்க வழக்கம் என்ற சிறிய வட்டத்திற்குள் வாழ்ந்து நம்மை சிறுமைப்படுத்திக் கொள்ளாமலும், இப்படித்தான் என்னால் வழமுடியும் என்று எண்ணாமல் பிறர் வாழ்வில் நம்பிக்கையும், வளமையும் ஏற்படுத்தும் சகோதரர்களாக வாழ்வோம். கட்டுப்பாடுகளைக் கொண்ட மதிப்பீடுகள் விடுத்து சந்தோஷம், பகிர்வு, அன்பு என்ற மனமகன் நிரந்தரமாக நம்மிலும் நம்மை சார்ந்தவர்கள் வாழ்விலும் கிடைக்க வேண்டுவோம்.

**ஜெபம் :**

எம்மிடையே நம்பிக்கையின் சுடராய் இருக்கும் இறைவா, நாங்கள் அனைவரும் எங்களுடைய பழமைவாத சிந்தனைகளை விடுத்து, சூழ்நிலைக்கு ஏற்ப எக்ஙளின் பணி வாழ்வையும், எங்களுடைய சகோதர குழும வாழ்வையும், விசுவாசத்தின் அடித்தளத்தில் கட்டி எழுப்பவும், அதன் மூலம் சந்தோஷம் அன்பு, பகிர்வு என்ற மதிப்பீடுகள் எம்மில் வளர உம்மை வேண்டுகிறோம்.



### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் இந்த உலகவிஷயங்களுக்கு இடம் கொடாமல், புனிதமானவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான், நீங்கள் உங்கள் மாணவர்களை புனிதமடையச் செய்யமுடியும். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 66:10-14

இரண்டாம் வாசகம்
கலாத்தியர் 6:14-18

நற்செய்தி
லூக்கா 10:1-12, 17-20

புனிதர்கள் சார்லஸ் லுவாங்காவும் தோழர்களும்

ஜுலை 2022

# 03

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

காணமால் நம்புவோர் பேறுபெற்றோர்

இன்றைய முதல்வாசகத்தில் பேதுருவின் வார்த்தைகள் நமக்கு சவாலான வார்த்தைகளாக அமைகின்றது. இறைவன் ஆள்பார்த்துச் செயல்படுவதில்லை. நேர்மையாக செயல்படுபவரே அவருக்கு ஏற்புடையவர்.

எனது இறையழைத்தல் எனது இறைவனால் கொடுக்கப்பட்ட பணியை செவ்வனே செய்வதற்கும் அதன் வழியாக இறைவனின் பிரசன்னத்தையும், பாதுகாப்பையும் பிறர் உணரவும், ஏற்றுக்கொள்ளவும் என்னை அர்ப்பணிக்கவுமே கொடுக்கப்பட்டது.

நமது லசாலிய வகுப்பறை பணி நம்முடைய மாணவர்களை நம் வழியாக இறைவனின் அன்பை உணரவும், இறைவனை நம் வழியாக விசுவசிக்கவும் அனைவரையும் ஒரே இனமாக ஏற்று வாழ உதவுகிறதோ என சிந்திப்போம்.

**ஜெபம் :**

அன்பின் இறைவா, எமது சகோதரப்பணியின் வழியாக உம்மை கண்டடையும் பாக்கியத்தை எமக்கும், எம்மை சார்ந்தவருக்கு கொடுத்தருளும். எமது பணியின் வழியாக எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அனைவரையும் உம்முடைய நம்பிக்கையின் மக்களாக மாற்ற அருள்தாரும்.

**தெலசாலின் பொன்மொழி**

இறை விசுவாசமே இந்நிறுவனத்தை வழி நடத்தி செல்லவேண்டும். அனைத்தையும் விசுவாச கண்களால் பார்க்க வேண்டும். கடவுளுக்கு உகந்தவற்றை செய்யவேண்டும்(MSF)

COMMUNICATION COMMISSION DE LA SALLE BROTHERS -INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர். இன்று இறைமகன் இயேசு பரிவுகொண்டு வாழ நம்மை அழைக்கிறார். தன்னலமற்ற அன்பும், பரிவும், இரக்கமும் நமது வாழ்வின் மையம் என்பதை இன்றைய இறைவார்த்தை சிந்திக்க அழைக்கிறது.

இறைவனின் அன்பு மகத்தானது என்பதற்கு இன்றைய முதல்வாசகமும், விசுவாசத்தினால் இறைவனையே இரங்கி வர வைக்க முடியும் என நற்செய்தி வாசகம் தெளிவுபடுத்துகின்றன.

பிறருடைய இகழ்ச்சியான வார்த்தையினாலும், செயல்களினாலும் நாம் செய்யும் நல்ல செயல்களை விட்டு விலாகது இறைவிசுவாசத்துடன் தொடர்ந்து பணிசெய்ய முயற்சி செய்வோம்.

**ஜெபம் :**

இகழ்ச்சிகளை பொருட்டாக எண்ணாமல் கொடுக்கப்பட்ட இறைவாழ்க்கையால் வெற்றிகொண்ட இறைவா, நாங்கள் பிறருடைய வார்த்தைகளுக்கும், எண்ணங்களுக்கும் இடம் கொடுத்து, அதனால் எங்களுடைய நல்ல செயல்களை விட்டு தவறி செல்வதை விடுத்து உமது அன்பில் நம்பிக்கை கொண்டவர்களாகவும், தன்னலமற்ற வாழ்வு வாழத் துணை புரியும். ஆமென்

முதல் வாசகம்
ஓசேயா 2:14-16,19-20

பதிலுரைப்பாடல்
திபா: 145:2-3,4-5,6-7,8-9

நற்செய்தி
மத்தேயு 9:18-26

போர்ச்சுக்கல் நாட்டு புனித எலிசபெத்

ஜூலை 2022

**04**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, உங்களின் செயல்பாடகள் எனக்கு ஊக்கமளிக்கின்றன. உங்களின் அக்கறை என்னை மகிழ்ச்சிப்படுத்துகிறது. (கடிதம் 32)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

இன்றைய நற்செய்தி நம்மையும் நமது பணியையும் இரண்டு கோணங்களில் சிந்திக்க அழைக்கின்றது. ஒன்று நமது நற்செயலால் புகழின் உச்சிக்கு செல்லும் விதமாக பிறருடைய வார்த்தைக்கு அடிமையாவதும், பிறருடைய கீழ்தரமான வார்த்தைக்கும் இகழ்ச்சிக்கும் செவிகொடுத்து சோர்வுருவதையும் சிந்திக்க நம்மை அழைக்கிறது.

நம்மை நம்பி எத்தனையோ இளைய சமுதாயத்தினை வழிதேடி வருகின்றார்கள் அவர்களுடன் சேர்ந்த நாமும் பயணிப்போம். அறுவடையோ மிகுதி, நாம் புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் விடுத்து, நமது அழைத்தலின் மேன்மையையும் ஏற்று வாழ இறைவனிடம் மன்றாடுவோம்.

**ஜெபம் :**

அறுவடையின் நாயகனே இறைவா, எம்மை நம்பி வந்த இளைய சமுதாயத்தை என்னுடைய அர்ப்பண வாழ்வின் வழியாக நல்வழிப்படுத்தவும் எமது ஆசிரியப்பணி பல இளைஞர்களை அர்ப்பண வாழ்வு வாழ தூண்டும் பணியாக அமையவும் எம்மோடு இருந்து பயணித்தருளும். ஆமென்.

முதல் வாசகம்
ஓசேயா 8:4-7, 11-13

பதிலுரைப்பாடல்கள்
தி.பா. 115:3-4,5-6,7-8,9-10

நற்செய்தி
மத்தேயு 9:32-38


புனித அந்தோணி மரிய சக்கரியா

ஜூலை 2022

**05**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, உங்களால் செபிக்கமுடியவில்லையென்றால் அதை இறைவனிடம் கூறுங்கள். பின் அவர் பிரசன்னத்தில் அமைதியாக இருங்கள். உங்களால் முடியாததை அவர் உங்களிடம் கேட்பதில்லை (கடிதம் 32)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
ஓசேயா 10:1-3,7-8,12

பதிலுரைப்பாடல்கள்
திபா. 105:2-3,4-5,6-7

நற்செய்தி
மத்தேயு 10:1-7

புனித மரிய கொரற்றி

ஜுலை 2022

**06**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

## சிந்தனைத் துளிகள்

இயேசு தம் சீடர்களுக்கு அதிகாரம் அளிக்கின்றார். இதனை இரண்டு நிகழ்வுகள் வெளிப்படுகின்றன. 1. அதிகார பகிர்வு, 2. பிறரின் நலன் காக்க அதிகாரம். இந்த அதிகார பகிர்வு நீதியை விதைக்கவும், அதன்பின் நற்கனியை அறுவடை செய்யவும் பகிரப்படுகின்றது. நம்மைபற்றி சிந்திப்போம். நமது லசாலிய பணி வளர அதிகாரங்கள் நம்மிடையே பகிரப்பட வேண்டும். வழிதவறி சென்று கொண்டிருக்கின்ற இளைய சமுதாயத்தை நல்வழிப்படுத்த நமது லசாலிய அதிகாரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். நம்மோடு உடன் உழைக்கின்ற உழைப்பாளர்களுக்கு இப்பகிர்வில் இடம் அளிக்கப்பட வேண்டும். நாம் அவர்களை இறைவனிடம் அழைத்துச்செல்லும் நல்ல அருட்சகோதர்களாக இருக்க இறைவன் நம்மை பயன்படுத்தட்டும்.

**ஜெபம் :**

பகிர்வின் இறைவா, எமது லசாலியப்பணி வாழ்வு அதிகாரத்தையும், பேராசையும் சார்ந்து இல்லாமல் எப்பணியும் உமது பணியே என்ற எண்ணத்தில் நாங்கள் வளரவும், எம்மோடு பயணிக்கின்ற உடன் உழைப்பாளர்களுடன் புரிதலுடன் வாழவும் அதன் வழியாக எமது லசாலிய பணிவாழ்வு பகிரப்படவும் எங்களுக்கு அருள் தாரும்.

**தெலசாலின் பொன்மொழி**

தினமும் இறைவேண்டிலில் திளைத்திருங்கள், கடவுள் கற்பித்த செபத்தை தினமும் தியானியுங்கள் (MSF)



COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
ஓசேயா 11:1-4,8-9

பதிலுரைப்பாடல்
திபா. 80:1-2,14-15

நற்செய்தி
மத்தேயு 10:7-15

அலெக்சாந்திரியா நகர்
புனித பாங்தேனுஸ்

ஜூலை 2022

**07**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

இயேசு இன்றைய இறைவார்த்தையின் வழியாக நம்மை ஊக்கப்படுத்துகிறார். இறைவனின் சீடர்கள் என அழைக்கப்பட பிறரின் நலன் விரும்பிகளாகவும், பரிவுள்ளம் கொண்டு வாழ நம்மை அனுப்புகின்றார்.

மேலும் இயேசு தனது சீடர்களை பார்த்து இலவசமாகப் பெற்றீர்கள், இலவசமாகக் கொடுங்கள் என்றும் கூறுவது நமது பொருட்கள் மீதும், பதவியின் மீது நாம் கொண்டிருக்கின்ற பற்றைப்பற்றினைக் குறித்துச் சிந்திக்கவே

கொரோனா காலகட்டத்தில் எத்தனையோ மக்கள் துன்பங்களுக்கு ஆளானபோதும், இறைவன் நம்மை பாதுகாத்து வந்துள்ளார்.

நாம் இறைவிசுவாசத்தாலும், ஜெப வாழ்வினாலும் பேராசையை விடுத்து, நமது நம்பிக்கையினாலும், விசுவாசத்திகாலும் பிறர் நலனைப் பேணி வாழ இறைவன் அருள்புரிவாராக.

**ஜெபம் :**

இறைவா எமது சகோதரர்களையும், உடன் உழைப்பாளர்களையும் இக்கட்டான சோதனைகளிலிருந்து காத்து வந்ததர்காக உமக்கு நன்றி. எங்களையும், உம்மைப்போன்று கொடையாளராக வாழ வரம் தாரும். எங்களுடைய துறவற வாழ்வை பிறருக்கு கொடையாக கொடுத்து அதன் வழியாக இறைவிசுவாசத்தில் அனைவரையும் வளர்த்தெடுக்க எங்களுக்கு கிருபை தாரும் இறைவா.



**தெலசாலின் பொன்மொழி**

இயேசுவை போன்று உங்கள் மாணவர்களுக்கு செபிக்க கற்றுக்கொடுப்பது முக்கியமானது (MSF)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS -INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
ஓசேயா 14:1-9

பதிலுரைப்பாடல்
திபா: 51:1-2,6-7,10-11,12,15

நற்செய்தி
மத்தேயு 10:16-23

புனித ஹெஸ் - ப்ரியஸ் மற்றும் ஜோ

ஜூலை 2022

**08**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

## சிந்தனைத் துளிகள்

அனைவரது துறவற வாழ்விலும் கடந்த ஆண்டுகளில் எத்தனையோ சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவை அனைத்தையும் கடந்து வர துணை நின்றதற்கு. இறைவனுக்கு நன்றி

ஆனால் உண்மையை பேசியதால் பழிவாங்கப்பட்டோமா? எனக்கு பிடிக்காதவனின் நண்பன் என்பதற்காக முத்திரை குத்தப்பட்டோமா?

**ஜெபம் :**

மன்னிப்பின் இறைவா தவறான, எமது சிந்தனைகளாலும், தவறான ஆண்டு முறையானாலும் பயத்தினாளும் எமது சகோதரர்களையும், உடன் உழைப்பாளர்களையும் ஒதுக்கியதர்காகவும், அவர்களைப்பற்றி தவறான புரிதலை கொண்டு வாழ்ந்ததர்காகவும், எங்களை மன்னித்தருளும். உமது இறைவசனம் எங்களுக்கு மருந்தாக மாறவும், நாங்கள் நேர்மறை எண்ணங்களில் வளரவும் உமது ஆசீரைத் தந்தருளும். ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, நீங்கள் உங்கள் தந்தையின் அகலை அகற்றி விட்டதை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகிறேன். (கடிதம் 4)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
எசாயா 6:1-8

பதிலுரைப்பாடல்
திபா. 93:1-2,5

நற்செய்தி
மத்தேயு 10:24-33

புனித அகுஸ்தீன் சவோ ரோங்

ஜுலை 2022

**09**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

## சிந்தனைத் துளிகள்

இங்கு இறைமகன் இயேசு சமத்துவதை வலியுறுத்துவதையும், நமக்கு கொடுக்கப்பட்ட வாழ்வினில் குறிப்பாக வாய்ப்புக்களில் பிறரை எப்படி அனுகுகின்றோம் என சிந்திக்க அவர் அழைக்கிறார். நான் பெரியவன், எனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற எண்ணத்துடன் நகர்கின்றோமா? அல்லது பிறருக்கும் நம்மை போன்று சிந்திக்க உரிமை உண்டு என ஏற்றுக்கொள்கிறோமா?

இறைவனின் பார்வையிலிருந்து தப்பிப்பது என்பது முடியாத காரியம் நாம் செய்யும் அனைத்து செயலுக்கும் வெகுமதி இறைவனிடம் உண்டு.

நமது விசுவாசம் ஒளிரட்டும். இறைவனின் அருளால் நமது லசாலிய பணி சிறக்கட்டும்.

**ஜெபம் :**

எல்லாம் வல்ல இறைவா எங்களை பல வாய்ப்புகள் கொடுத்து இந்த நாள் வரையில் உமது பிள்ளைகளாக வாழ வாய்ப்புக்கொடுத்த கிருபைக்காக நன்றி. எங்களுடைய பலவீனங்களினால் உமது பார்வையிலிருந்து நாங்கள் விலகாமலும், எங்களுடைய தற்பெருமைகளுக்கு அடிமையாகாமலும் எங்களுடைய விசுவாசதத்தில் வேறூன்றி வாழ அருள்தாரும்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, மாணவர்களை பட்ட பெயர்வைத்து அழைப்பது அருவருப்புக்கு உரியது. அது அவர்களுக்கு தவறான சான்றாக அமையும் (கடிதம் - 4)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





முதல் வாசகம்
இ.நூல் 30:10-14

இரண்டாம் வாசகம்
கொலோ 1:15-20

நற்செய்தி
லூக்கா 10:25-37

பொதுக்காலம்
15-ம்
ஞாயிறு

ஜுலை 2022
**10**
ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

## சிந்தனைத் துளிகள்

இன்றைய துறவற வாழ்வுக்கு குறிப்பாக துறவற குழும வாழ்வுக்கு சவுக்கடி கொடுக்கும் இறைவார்த்தையாக இன்றைய வாசகங்கள் அமைகின்றன.

எத்தனையோ துறவிகள் தற்கொலை செய்வதையும், கடினமான வெறுப்பு வார்த்தைகளால் ஒதுங்கி தனிமையில் வாழ்வதை சர்வசாதாரணமாக காண முடிகின்றது.

உன்மீது நீ அன்பு கூறுவதுபோல் உனக்கு அடுத்தவர் மீதும் அன்பு கூறுவாயாக என்றும் வார்த்தை செயலாக்கப்பட்டால் தான் கடவுளாகிய ஆண்டவரே அன்பு செய்ய முடியும் என்பது எனத முழுநம்பிக்கை

**ஜெபம் :**

நாங்கள் அனைவருமே முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனதோடும் உம்மையும், எங்களோடு வாழ்கின்ற எமது அருட்சகோதரர்களையும், உடனுழைப்பாளர்களையும் அன்பு செய்யவும், பிறருக்கு பணிவிடை புரியவும் எங்களை ஆசீர்வதியும். மேலும் நாங்கள் எங்களை பிறர்முன் உம்முடைய சீடர்களாக கூறுவதில் பெறுமை கொள்பவர்களாக இருக்க எங்கள் மனதை மாற்றியருளும். ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

உங்கள் பாதுகாப்பில் உள்ள மாணவர்களுக்கு கற்பிக்கும் கலையை புனித பெனடிக்டிடம் கற்றுக்கொள்ளுங்கள். அவர்களை வழிநடத்த அவரின் அருளை செபத்தில் கேளுங்கள்.(MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

தம் வழியைச் செம்மைப்படுத்துவோர் கடவுள் தரும் மீட்பை கண்டடைவர் என இயேசு நமக்கு நினைவூட்டுகிறார்.

இன்றைய வாசகங்கள் நமது ஜெபவாழ்வையும், பணிவாழ்வையும் ஒருங்கிணைத்துச்செல்ல அழைப்பு விடுக்கின்றன. இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பது செயல்படும் ஆன்மீகத்தையே. இறை உண்மைகள், நமது விசுவாசம் அனைத்தும் செயலாக்கம் பெறவேண்டும்.

இறை வேண்டல், இறைநம்பிக்கை செயலாக்கம் அடையும்பொழுது அங்கு அமைதியும், இறையனுபவமும் நமக்கும் நாம் சந்திக்கும் மக்களுக்கும் ஏற்படுகின்றன. இறை விசுவாசத்தால் நமது குடும்பத்தை வளப்படுத்துவோம் இறைவனின் அன்பில் வளருவோம்.

**ஜெபம் :**

எங்களுடைய துறவற குழும வாழ்வினைச் , செம்மையாக்கும். எங்களது லசாலிய வாழ்வு ஜெபவாழ்வும், பணிவாழ்வும் இணைந்த வாழ்க்கையாக மாறவும், எங்களிடையே இருக்கும் தவறான புரிதல்களை உமது பேரன்பினால் மாற்றியருளும் உமது பணியாகிய கல்விப்பணியை தொடர்ந்து செய்ய அருள்தாரும். ஆமென்.

முதல் வாசகம்
எசாயா 1:11-17

பதிலுரைப்பாடல்
திபா : 50:8-9,16-17,21,23

நற்செய்தி
மத்தேயு 10:34-11:1

புனித பெனடிக்ட்

ஜூலை 2022

**11**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC



**தெலசாலின் பொன்மொழி**

உங்கள் நற்செயல்களால் போதியுங்கள், இளையோர் எதை செய்ய வேண்டும் என்பதை அவர்கள் கண்முன் செய்து காட்டுங்கள். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS-INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
எசாயா 7:1-9

பதிலுரைப்பாடல்கள்
திபா. 48:1-2,3,4,5,6-7

நற்செய்தி
மத்தேயு 11:20-24

புனித ஜான் குவல்பர்ட்

ஜூலை 2022

**12**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

## சிந்தனைத் துளிகள்

இன்றைய வாசகம் இறைவன் எவ்வளவு இரக்கமும், கண்டிப்பும் உடையவர் என சிந்திக்க அழைக்கின்றது. இவ்வாசகத்தின் வழியாக இறைவனால் அழைக்கப்பட்ட அனைவரும் எத்தகைய மனநிலையில் வாழவேண்டும், என சிந்திக்க இயேசு விரும்புகிறார். அனைவரையும் அரவணைத்து செல்வதும், எது நடந்தாலும் இயேசுவில் நான் நலமாகவும், சந்தோஷமாகவும் இருக்க விரும்பும்கிறேன், அன்பு செய்ய வேண்டிய இடத்தில் அன்பையும், தவறை சுட்டிக்காட்ட வேண்டிய இடத்தில் அன்புடன் சுட்டிக்காட்டவும் அழைக்கப்பட்டுள்ளோம்

இரக்கமே உருவான இறைவன் நம்முடைய தவறுகளை நாம் உணரவும், நம்மை சுற்றியிருப்போரின் தவறுகளை அன்புடன் சுட்டிக்காட்டி நல்வழிக்கு ஊக்கப்படுத்தவும் எமக்கு அருள்புரிவீராக.

**ஜெபம் :**

நீர் நீதிமான்களையன்று பாவிகளுக்காகவே வந்தீர். எங்களை எங்களுடைய மனசாட்சியின்படி வாழ தைரியத்தையும், பேருக்கும், புகழுக்கும், பதவிக்கும் ஆசைப்பட்டு தவறுக்கு ஒத்துப்போவதை விடுத்து, தவறுகளை சுட்டிக்காட்டக் கூடிய தைரியத்தை எங்கள் உள்ளத்தில் விதைத்தருளும். ஆமென்



**தெலசாலின் பொன்மொழி**

கடவுள் உங்களை அழைத்து, அவரின் பணிக்காக உங்களை தேர்ந்தெடுத்து அவரின் தோட்டத்தில் வேலை செய்ய உங்களை அனுப்பியுள்ளார். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
எசாயா 10:5-7,1 3-16

பதிலுரைப்பாடல்கள்
திபா. 94:5-6,7-8,9-10,14-15

நற்செய்தி
மத்தேயு 11:25-27

புனித ஹென்றி

ஜுலை 2022

**13**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

## சிந்தனைத் துளிகள்

அனைத்தும் தெரிந்தவர்களாகவும், அனைத்தையும் பற்றி பேசத் தெரிந்தவனாக வாழவேண்டுமா அல்லது ஒரு குழந்தையின் மனநிலையில் வாழ வேண்டுமா? இறைவனின் அருளும் ஆசீரும் குழந்தையின் மனநிலையில் வாழ்வோரிலே இருக்கும் என்பதை நாம் உணரவேண்டும்.

எப்பொழுதும் திறந்த மனப்பான்மையும், ஆர்வமும், தெரிந்து கொள்ள வேண்டு என்னை ஏக்கமும் உடைய குழந்தை மனம் நம்மிடையே வளர வேண்டும்.

இவ்வுலகில் முழு நிரபராதியும் இல்லை, முழு குற்றவாளியும் இல்லை, அனைத்தும் தெரிந்தவரும் இல்லை, தெரியாதவரும் இல்லை.

கல்விப்பணியின் வழியாக இறைப்பணி செய்கின்ற நாம் கபடற்ற மனதுடன் அனைவருடனும் சேர்ந்து பணியாற்றுவோம், பிறரிடமிருந்து கற்றுக்கொள்வேமாக.

**ஜெபம் :**

ஞானத்தின் இருப்பிடமே இறைவா, எங்கள் மனதினை திறந்த மனதாக மாற்றியருளும். உமக்குகந்த குழந்தை மனதுடன் நாங்கள் கள்ளம் கபடமற்றவர்களாகவும், அதே வேளையில் தொடர்ந்து பிறரிடமிருந்து நல்ல செயல்களை நாங்களும் கற்றுக்கொள்ளவும் தேவையான மனப்பான்மையை தாரும். எங்களின் பணித்தளத்திலும் குழும வாழ்விலும் தன்னலமற்றவர்களாக வாழ துணை செய்யவும் ஆண்டவரே – ஆமென்.

**தெலசாலின் பொன்மொழி**

கடவுளின் மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ள உங்களை கடவுள் நிறைவாக ஆசீர்வதிக்கிறார். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 26:7-9,12,16-19

பதிலுரைப்பாடல்கள்
திபா. 102:12-20

நற்செய்தி
மத்தேயு 11:28-30

புனித கமில்லஸ் தெ லெல்லிஸ்

ஜூலை 2022
**14**
வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

இவ்வுலகில் பயணிக்கிற அனைவருமே சந்தோஷத்தையும், துன்பத்தையும் அனுபவிக்கிறோம். இன்றைய வாசகம் சற்று வித்தியாசமாக நம்மை சிந்திக்க அழைக்கிறது. தனது துன்பங்களால் வாழ்வை வெறுக்கின்ற அனைவரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு ஆறுதல் தருவேன் என்கிறார் இயேசு.

இது நமக்கு கொடுக்கப்பட்ட அழைப்பு நம்மை வாட்டி வதைக்கும், மன அழுத்தம், கவலைகள், ஏமாற்றங்கள் அனைத்தையும் இறைவனிடம் சமர்பிப்போம்.

இறைவனின் ஆசியுடன், எந்த சவாலையும் திறந்த மனதுடன் எதிர்கொள்வோம். பயமோ, தயக்கமோ இன்றி அவரிடம் நமது பணித்தளக்களையும் ஒப்படைப்போம். அவர் நம்மை சரியான வழியில் எடுத்துச்செல்வார்.

**ஜெபம் :**

இறைவா, எங்களுடைய அன்றாட வாழ்வில் நாங்கள் சந்திக்கின்ற சவால்களும், சோதனைகளும் எங்களைச் சோர்வடையச் செய்யாமல் உம்மீது நம்பிக்கை கொண்டவர்களாக எங்களை உம்மிடம் முழுமையாக ஒப்படைக்கும் ஆற்றலை தந்தருளும். நாங்கள் எங்களுடன் பயணிக்கின்ற அனைவரையும் எங்களால் சோர்வடையாமல் ஊக்கத்தையளிக்கும் மனிதர்களாக மாற்றியருளும். ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

என் அன்பு சகோதரரே, உங்கள் கடினமான நேரங்களில் உங்களுக்கு இறையழைத்தலை பற்றி ஏற்படும் சந்தேகங்கள், உங்களை மனவிரக்தியடைச் செய்யும், அது பயனுள்ள கனியை பெறவிடாமல் தடுக்கும் அலகை செய்யும் மாயை (கடிதம் 73)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன், என்னும் இறைவார்த்தை நம்மை இரக்கத்தின் பார்வையில் செயல்பட அழைக்கிறது.

இன்றைய நிகழ்வுகளில் அதிகமானவை மனிதனின் சுய நலத்தைச் சார்ந்ததாகவும், மனிதாபிமானத்தை புறம் தள்ளக் கூடியதாக இருப்பதை காண்கிறோம்.

இரக்க குணம் உடையவர் மட்டுமே மனிதாபிமானத்தை நிலைநாட்ட முடியும், இரக்கம் நம்மை உற்சாகப்படுத்தும். நம்பிக்கையை ஏற்படுத்தும். இரக்கத்தின் கடவுள் நம் அனைவரையும் இரக்கத்துடன் பணி செய்ய அழைக்கின்றார்.

**ஜெபம் :**

இரக்கத்தின் இறைவா, எங்களின் பொறுப்புகளின் நிமித்தம் பல நேரங்களில் பிறரின்மீது பரிவின்றி நடந்துகொண்டதற்காக வருந்துகின்றோம். எங்களையும் எல்லா சூழ்நிலைகளிலும் இரக்கமும், பரிவும் உள்ள அருட்சகோதரர்களாக வாழவும் இதன் வழியாக எமது லசாலிய பணி அனைவரையும் சென்றடையவும் எங்களை வழிநடத்தும். ஆமென்.

முதல் வாசகம்
எசாயா 38:1-6,21-22,7-8

பதிலுரைப்பாடல்கள்
எசா 38:10,11,12,16

நற்செய்தி
மத்தேயு 12:1-8

புனித
பொனவெந்தூர்

ஜூலை 2022

**15**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC



**தெலசாலின் பொன்மொழி**

நீங்கள் உங்கள் சகோதரருடன் ஒற்றுமையாக இருக்கிறீர்களா? அவருடன் அன்பாக பழகுகிறீர்களா? (MSF)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS -INDIA ★

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

மதத்தலைவர்களே தங்களை மீட்க வந்த மீட்பரையே கொல்ல சதிசெய்வதையும், அதையும் பொருட்படுத்தாமல் தனக்கு கொடுக்கப்பட்ட மீட்பின் பணியை இயேசு தொடர்வதை அறிகிறோம்.

இது பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே நடந்தாலும் இன்றும் இயேசுவை கொல்ல நாமும் சதிசெய்கின்றோமா என்று சிந்திப்போம்.

அடுத்தவரை நாம் எப்படி பழிவாங்குவது என்பதை மறந்து மீட்பர் காட்டும் பணியை செய்யவும், நல்லதை செய்வதாலும், சவால் நிறைந்த இடங்களிலிருந்து பணிசெய்யும் போது ஏற்படும் மனக்கவலைகளை, துன்பங்களை நீக்க இறைவன் நம்முடன் இருந்து நம்மை ஆசீர்வதிப்பாராக.

**ஜெபம் :**

சமாதானத்தின் இறைவா, எமது லசாலியப் பணி எமது நாட்டில் பல இடங்களில் சென்றடைய வேண்டிய வேளையில் எமது குறுகிய எண்ணத்தால் பிறரை சென்றடையாமல் முடங்கி கிடக்கின்றது. எங்களிடையே இருக்கின்ற எதிர்மறை எண்ணங்கள், மற்றும் செயல்களை விடுத்து எமது லசாலியப் பணியை பிற இடங்களுக்கும் எடுத்துச் செல்ல வரம் தாரும். மேலும் எமது வாழ்வு உம்மை உயர்த்தும் வாழ்வாக மாற எமக்கு துணைபுரியும்.

முதல் வாசகம்
மீக்கா 2:1-5

பதிலுரைப்பாடல்
திபா. 10:1-4,7-8,14

நற்செய்தி
மத்தேயு 12:14-21

கார்மல் மலை புனித கன்னி மரியா

ஜூலை 2022

**16**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, நான் உங்களுக்காகவும், உங்களின் வெற்றிக்காகவும் செபம் செய்ய தவறுவதில்லை (கடிதம் – 28)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

மார்த்தா, மார்த்தா, நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய் என்ற இயேசுவின் வார்த்தை இரண்டு செய்திகளை தெளிவுபடுத்துகிறது.

பெரும்பாலான நேரங்களில் நாம் எடுக்கும் முடிவுதான் சரியானது என்று தவறான எண்ணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஆனால் இயேசு கூறுவது ஒன்றே ஒன்று. அது இயேசுவின் வார்த்தைக்கு செவிகொடுப்பது, எப்பொழுத நமது செயல்கள் அனைத்தும் இறைவனின் பிரசன்னத்தில் செயல்படுத்தப்படுகிறதோ அப்போது நாமும் சரியான முடிவை எடுக்கின்றோம்.

நம்முடைய பணிகள் அனைத்தும் நம்முடைய தனி ஜெப வாழ்வால் வளரட்டும்.

**ஜெபம் :**

வழிநடத்தும் வல்லலே இறைவா, எமது லசாலிய வாழ்வின் அடித்தளமே ஜெபவாழ்வு, நாங்கள் எங்களின் வாழ்வில் தினமும் உம்மை ஜெபத்தின் வழியாக சந்திக்கவும், அச்சந்திப்பு எங்களின் பணிவாழ்வில் வெளிப்படவும் வரம் தாரும். எங்களுடைய சபையின் முடிவுகள், பணித்தளத்தில் எடுக்கின்ற முடிவுகள் அனைத்தும் உமது வார்த்தையை மட்டுமே கொண்டு எடுக்க எமக்கும் எம் தலைவர்களுக்கும் ஆசி அளித்தருளும்.

முதல் வாசகம்
தொ.நூ 18:1-10

இரண்டாம் வாசகம்
கொலோசையர் 1:24-28

நற்செய்தி
லூக்கா 1:24-28

16-ம் ஞாயிறு

ஜுலை 2022

**17**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC



**தெலசாலின் பொன்மொழி**

விசுவாசத்துடன் என்றாவது உங்களது அர்ப்பணிப்பை பற்றி தியானித்திருக்கிறீர்களா? (MSF)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS - INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
மீக்கா 6:1-4,6-8

பதிலுரைப்பாடல்
திபா. 50:5-6,8-9,16-17,21,23

நற்செய்தி
மத்தேயு 12:38-42

புனித ஃபிரடரிக்

ஜூலை 2022

**18**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

## சிந்தனைத் துளிகள்

போதகரே நீர் அடையாளம் ஒன்று காட்ட வேண்டும். என்கின்றனர் மக்கள். இயேசுவோ யோனாவின் அடையாளத்தைத் தவிர வேறு அடையாளம் ஏதும் கொடுக்கப்பட மாட்டாது என்கிறார் அதாவது தான் சந்திக்கப்போகின்ற மரணம் மற்றும் உயிர்ப்பைவிட மேலான அடையாளம் எதுவும் தேவையில்லை. யோனாவின் அடையாளங்கள் இயேசுவின் இறப்பு மற்றும் உயிர்ப்பைப்பற்றி கூறுகின்றன.

நாமும் அதிக நேரங்களில் அடையாளங்களையும், புதுமைகளையும் தேடி அலைகின்றோம். ஆனால் நமது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் மீறிய அதிசயம் எதுவும் இல்லை. நாம் இயேசுவின் மீது முழு விசுவாசம் கொள்வோம் அவரின் அடையாளமாக நாம் வாழ்வோம். நமது வாழ்வில் எத்தகைய சவால்கள் வந்தாலும் விசுவாசத்துடன் அணுகுவோம்.

**ஜெபம் :**

அற்புதங்கள் புரியும் இயேசுவே நாங்கள் அடையாளங்களையும், அர்புதங்களையும் எதிர்பார்த்து வாழாமல் எமது கல்விப்பணியின் வழியாக பிறருடைய வாழ்வில் அற்புதங்கள் செய்யும் நற் சகோதரர்களாக வாழ வரம் தாரும். ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

என் அன்பு சகோதரரே, நாம் கோபத்துடனும், வெறுப்புணர்ச்சியுடனும் இருந்தோமானால், நாம் இயேசுவுடன் ஒற்றுமயைாக இருக்க முடியாது. நாம் இயேசுவுடன் ஒற்றுமையாக இல்லாதபோதுதந்தை கடவுளும் நம் செபங்களை கேட்கமாட்டார். (கடிதம் - 105)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
மீக்கா 7:14-15,18-20

பதிலுரைப்பாடல்கள்
தி.பா 85:1-3,4-5,6-7

நற்செய்தி
மத்தேயு 12:46-50

புனிதர்கள்
ஜஸ்டா மற்றும்
ருஃபினா

ஜூலை 2022

**19**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

என் தாய் யார்? என் சகோதரர்கள் யார்?என்கிற கேள்விக்கு பதில் என்ன? இறைவனின் திருக்குடும்பத்தின் உறுப்பினராக ஒரே தகுதி அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதே.

இங்கு மரியன்னையை விட யார் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்ற முடியும். ஒரு இரத்த சம்பந்த உறவாகவும், ஒரு ஆன்மீக உறவாகவும் மரியாள் இயேசுவோடு பயணிக்கிறார். இங்க யார் என் தாய், மற்றும் சகோதரர்கள் என்று இயேசு கேட்ட கேள்வி அனைத்து மக்களும் மரியாளின் மகிமையை உணரவேண்டும் என்பதற்காகவே எழுப்படுகிறது

மரியன்னையைப் போல நாக்கும் மேன்மை பொருந்திய இறைமகன் இயேசு நமக்கும் கீழ்படிதல் என்ற வரத்தை அளிப்பதாக, அனைத்திலும் அவருடைய விருப்பம் நம் வழியாக நிறைவேறவும், அவருடைய திருக்குடும்பத்தின் நிலையான உறுப்பினராக வேண்டிக்கொள்ளுவோம்.

**ஜெபம் :**

எளிமையின் இறைவா, எங்கள் லசாலிய குடும்பங்களை நிறைவாக ஆசீர்வதித்தருளும். நாங்கள் உம்முடைய சகோதரர்களாக வாழ எம்மிடையே ஆன்மீகத்தையும், உம்மோடு தொடர்ந்து பயணிக்க உமது குடும்ப உறுப்பினராக எங்களை மாற்றியருளும். ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, நீங்கள் அனுபவிக்கும் சோதனைகளால் நீங்கள் மனச்சோர்வினை அடைந்து விடாமல் பார்த்துகொள்ள வேண்டும். (கடிதம் : 19)

COMMUNICATION COMMISSION DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

அவரைக் கண்டடைவோர் எல்லாம் என்றென்றும் நிலைத்திருப்பர்.

முதல் வாசகம்
எரேமியா 1:1,4-10

பதிலுரைப்பாடல்கள்
திபா. 71:1-2,3-4a,5-6ab,, 15ab, 17

நற்செய்தி
மத்தேயு 13:1-9

புனித எலியாஸ் மற்றும் ஃபிளாவியான்

ஜூலை 2022

**20**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

யாருக்கு ? தாழ்ச்சி என்றும் பெறும் குணமுடையோர். இத்தகைய தாழ்ச்சி நம்மில் வளர நம்முடைய உள் மனம் வளம் நிறைந்த மனமாக கொண்டிருக்க வேண்டும். எப்பொழுது நமது எண்ணமும், மனமும் சத்தான உரத்தினால் நிரப்பப்படுகிறதோ அப்பொழுதுதான் இறைவனின் வார்த்தை நம்மில் வேறூண்டி வளரும்.

நம் மனமும் எண்ணமும் சத்துள்ளதாக மாற நம்முடைய எண்ணங்களை மாற்றுவோம், தாழ்ச்சியுடன் அவர் பிரசன்னத்தில் வளருவோம், மறைபொருளை அறிந்து அதை அனைவருக்கும் அறிவிப்போம்.

**ஜெபம் :**

ஆண்டவரே, எங்களின் உள்ளங்களை நேர்மறை எண்ணங்களால் வளமையாக்கும். எங்களின் அன்றாட வாழ்வில் உமது வார்த்தைகளை தாங்கி நிற்கக்கூடிய வல்லமையை தாரும்.

இறைவா தாழ்ச்சி என்ற நற் குணமுடைய அருட்சகோதரர்களாக எங்களை மேம்படுத்தி எம் குழும வாழ்வையும் உறுதிப்படுத்தியருளும். ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, எந்த செயல்பாட்டின் தீர்வையும் கடவுளின் கையில் ஒப்படையுங்கள் (கடிதம் - 11)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
எரேமியா 2:1-3,7-8,12-13

பதிலுரைப்பாடல்
திபா. 36:5-10

நற்செய்தி
மத்தேயு 13:10-17

பிரிந்திசி நகர்ப் புனித லாரன்ஸ்

ஜூலை 2022

**21**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

## சிந்தனைத் துளிகள்

உள்ளவருக்கு கொடுக்கப்படும், மாறாக இல்லாதவரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும். இவ்வாக்கியங்கள் மிகவும் எளிமையான அர்த்தத்தையும் மிக பெரிய மனப்பான்மையையும் உள்ளடக்கியது.

எப்பொழுது நாம் இறை உண்மையை திறந்த மனதோடு விசுவசிக்கிறோமோ அப்பொழுது பொழுது இறைமகன் இயேசுவின் வார்த்தைகளில் தெளிவு ஏற்படுகிறது அதனால் இறைவனின் ஆசீர் நிரம்ப கிடைக்கிறது. திறந்த மனமில்லாமல் கேட்கும்பொழுது பிறரிடமிருந்து நமக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை.

எனவே திறந்த மனதுடன் நமது விசுவாசத்தை வளர்த்தெடுத்து நமது வாழ்வை செம்மைப்படுத்துவோம். அதே நேரத்தில் நமது குறைந்த விசுவாசத்துடன் இறுகிய மனதுடன் வாழ்ந்து நமது வாழ்வை இழக்காமல் இருப்போம்.

**ஜெபம் :**

அன்பின் இறைவா, உள்ளவர்களுக்கு கொடுக்கப்படும் என்ற உமது இறைவார்த்தை எங்களிடம் உள்ள பிறருக்கு செவிகொடுப்பதும், அன்பு, பரிவு, அர்ப்பணிப்பு, இறைவிசுவாசம் மற்றும் பல நல்ல குணங்களை மென்மேலும் வளர்க்க அருள்தாரும். எங்களிடையே இல்லை என்ற பலவீனத்தை அகற்றி உமது விசுவாசத்தின் பிள்ளைகளாக மாற்றயருளும் ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

அன்பு சகோதரரே, கடவுள் உங்களை தன் ஆவியால் நிறைத்து அவரின் திருவுள்ளத்தை உங்களில் நிறைவேற்ற அவரிடம் நான் வேண்டுகிறேன். (கடிதம் 16)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS - INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

இன்றைய புனிதையின் விழா நம்மை இறைவனின் மன்னிப்பையும் நிலையான அன்பையும் சிந்திக்க அழைக்கிறது. நற்செய்தியில் இன்றைய புனிதை மதலேன் மரியாள் பாவி என்றும், பேய்களால் ஆட்கொள்ளப்பட்டவர் என்றும் வாசிக்கின்றோம்.

ஆனால் அவள் இயேசுவுடன் கொண்ட பற்று, அவரை இயேசுவின் நம்பிக்கைக்குரியவராக மாற்றுவதையும் அறிவோம். இவரே இயேசுவின் உயிர்ப்பை கண்ட முதல் பெண் மற்றும் அவற்றை அறிவிக்கும் நல்ல செய்தியாளராவார்.

இப்பேற்பட்ட மதலேன் மரியாளைப்போன்று நாமும் மனம் மாறிய மற்றும் இயேசுவால் மிகவும் நேசிக்கப்பட்டவர்களாக வாழ நம்முடைய முழு மனதுடனும் உண்மையான உள்ளத்துடனும் அவரை தேடுவோம். அவரே நம்மை அவருடைய நற்செய்தியாளராக நமது பணித்தளங்களின் ஏற்படுத்துவாராக.

**ஜெபம் :**

மன்னிப்பின் இறைவா, எங்களிடையே இருக்கின்ற பாவி என்ற சிந்தனையில் மூழ்காமல் உம்முடன் பற்றுகொண்டு வாழ எங்களுக்கு வரம் தாரும். ஆமென்.

முதல் வாசகம்
2 கொரி 5:14-17

பதிலுரைப்பாடல்
திபா. 63:1,2-3,4-5,7-8

நற்செய்தி
யோவான் 20:1, 11-18

புனித மகதலா மரியா

ஜூலை 2022

**22**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC



### தெலசாலின் பொன்மொழி

இயேசுவின் மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்த அவரிடம் செபங்களில் பேச, மற்றும் திருவிருந்துகளில் அவரை பெற மிகுந்த எதிர்பார்ப்பை கொண்டிருக்க வேண்டும்.(MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

இன்றைய உவமையின் வாயிலாக இயேசு நம்முடைய எண்ணங்களையும், செயல்பாடுகளையும் பற்றி சிந்திக்க அழைக்கின்றார். நாம் அனைவருமே நல்ல விதையைப்போன்று நல்ல குணங்களாலும், செயல்களாலும் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், அதே நேரத்தில் நம்மிடையே களைகளைப் போன்று கெட்ட எண்ணங்களும் வளர்கின்றன. ஆனால் நாம் அதிகநேரம் நம்மிடையே உள்ள நல்ல விஷயங்களை மறந்து கெட்ட விஷயங்களைப்பற்றி அதிக கவலைப்பட்டுக்கொண்டிருக்கின்றோம். நம்மைச்சுற்றி அதிகப்படியான நல்ல தருணங்கள் இருக்கின்றன. ஒருசில கெட்ட தருணங்களையும் நம்முடைய கெட்ட எண்ணங்களையும் இறைவன் பாதத்தில் சமர்பிப்போம். நேரம் வரும்பொழுது நீதியினால் நம்முடைய களைகள் நீக்கப்படும் நீதியின் இறைவன், நம்மை சோதனைகளில் விழாதபடியும், சந்தேகம், பொறாமை, வெறுப்பு பழிச்சொல் என்ற களைகளுக்கு அடிமையாகமல் நல்ல நேர்மறை எண்ணங்களில் வளர அருள் புரிவாராக.

**ஜெபம் :**

இறைவா, எங்கள் அனைவரையும் நல்ல பலன் தரும் விதைகளாக உருவாக்கியருளும். ஆமென்.

முதல் வாசகம்
எரேமியா 7:1-11

பதிலுரைப்பாடல்
திபா. 84:2,3,4-5a,7a,10

நற்செய்தி
மத்தேயு 13:24-30

புனித பிரிட்ஜிட்

ஜூலை 2022

# 23

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஜெயக்குமார் FSC



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, இறையருளின் மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டும் (கடிதம் 45)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

கேளுங்கள், உங்களுக்கு கொடுக்கப்படும், தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள் என்ற இறைமகன் இயேசுவின் வார்த்தை நமக்கு நம்பிக்கையையும், உற்சாகத்தையும் தருகிறது. இவ்வசனத்தை கேட்கும் அனைவரின் மனதிலும் நாம் இறைவனிடம் கேட்கும் அனைத்தும் நமக்கு கிடைக்கும் என்று எண்ணுகின்றோம். ஆனால் நமக்கு கிடைப்பதில்லை ஏனெனில் நாம் இறைவனின் சித்தத்தை நாம் வேண்டுவதில்லை. நாம் எப்பொழுது இறைவனின் சித்தத்தை நமக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று நினைக்கும்பொழுது நம்முடைய மற்ற தேவைகள் அனைத்தும் கேட்கப்படும்.

எனவே நம்மையே முழுமையாக இறைவிருப்பத்திற்கு விட்டுவிடுவோம். அவர் நமது தேவைகளை அறிவார்.

**ஜெபம் :**

இறைவா, எங்கள் தேவைகளையும், ஏக்கங்களையும் நீர் அறிவீர். எங்களின் மன்றாட்டுக்கள் நிறைவேறா சமயத்தில் எங்களது விசுவாசத்தினை தளராமல் காத்தருளும். மேலும் நாங்கள் உங்கள் விருப்பத்தின் பேரில் எங்களுடைய எண்ணங்களையும் விருப்பங்களையும் அமைக்கக்கூடிய தைரியத்தை தந்தருளும். ஆமென்.

முதல் வாசகம்
தொ.நூ 18:20-32

இரண்டாம் வாசகம்
கொலோ 2:12-14

நற்செய்தி
லூக்கா 11:1-13

பொதுக்காலம்
17 - ம்
ஞாயிறு

ஜுலை 2022

**24**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, உங்கள் பேச்சில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இறுமாப்புடைய பேச்சை கடவுள் வெறுக்கிறார். (கடிதம் - 49)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

நான் குடிக்கப்போகும் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா? என்ற இயேசுவின் வார்த்தை நம்மால் அவருடன் தொடர்ந்து பயணிக்க முடியுமா என சிந்திக்க அழைக்கின்றது. அவருடன் தொடர்ந்து பயணிக்க அவரைப்போன்று பிறருக்காக துன்புறவும், பிறர் நலனில் அக்கறை கொண்டவராகவும் முழுமையாக வாழ முடியுமா? அவருடைய மகிமையில் பங்குபெற நீதிக்காக குரல் கொடுப்போமா? பணித்தளங்களில் நம்முடைய குழும வாழ்வு நிமித்தம், ஏற்படும் சவால்களை நேர்மையுடனும் சந்திக்க முடியுமா?

இன்றைய புனிதர் யாக்கோபுவைப் போன்று நாமும் கடவுளின் மீது நம்பிக்கை வைப்போம், அந்நம்பிக்கை நம் பணித்தளங்களில் வெளிப்பட இறைவன் நமக்கு அருள்புரிவாராக.

**ஜெபம் :**

நம்பிக்கையின் இறைவா, புனித யாக்கோப்புவை போன்று நாங்களும் உமது விருந்தில் பங்குபெறும் பாக்கியத்தை தந்தருளும். நாங்களும் உம்மோடு பயணிக்க எங்களிடையே இருக்கின்ற சவால்களை தைரியத்துடன் எதிர்கொள்ளவும், நேர்மையுடன் அணுகவும், எங்களை ஊக்கப்படுத்தும். ஆமென்.

முதல் வாசகம்
2 கொரி 4:7-15

பதிலுரைப்பாடல்
திபா. 126:1-6

நற்செய்தி
மத்தேயு 20:20-28

புனித யாக்கோபு
திருத்தூதர்

ஜூலை 2022
**25**
திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC



**தெலசாலின் பொன்மொழி**

புனித யாகப்பர் தபோர் மலைக்கு சென்றதுபோல இயேசுவுடன் கல்வாரி மலைக்கு செல்ல தயாராக இருக்கிறோமா? (MSF)

## இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





முதல் வாசகம்
எரேமியா 14:17-22

பதிலுரைப்பாடல்கள்
திபா. 79:8,9,11,13

நற்செய்தி
மத்தேயு 13:36-43

புனிதர்கள்
சுவக்கி, அன்னா

ஜூலை 2022

**26**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

### சிந்தனைத் துளிகள்

கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும் நேர்மையாளர் தம் தந்தையின் ஆட்சியில் கதிரவனைப் போல் ஒளி வீசுவார்கள் என்ற இயேசவின் வார்த்தையானது இன்று நல்ல விதையையும், களைகளைப்பற்றியும் சிந்திக்க அழைக்கின்றது. உலகம் முடிவில் நடக்க இருக்கும் தனது திட்டத்தைப் பற்றி உவமையாக கூறும் இறைமகன் இயேசு நாளையே அந்த உலகம் முடியும் நாளாக இருந்தால் நாம் என்ன செய்ய போகிறோம் என யோசிக்க அழைக்கின்றார்.

நாம் ஒவ்வொருவருமே நல்ல விதைகளாக களைகள் மத்தியிலே வாழ அழைக்கப்படுகின்றோம். நம்முடைய அர்ப்பணம், அன்பு, பொறுமை, இறை விசுவாசம், விட்டுக்கொடுத்தல் பிறரின் குறைபாடுகளை ஏற்றுக்கொள்ளுதல் போன்ற நல்ல விதைகளை மனதில் விதைப்போம். பேராசை, போட்டி, பொறாமை அகங்காரம் போன்ற களைகளை இறைவன் நம்மிடையே உள்ளத்திலிருந்து பிடிங்கி எறிவாராக.

இன்றைய புனிதர்களான கன்னி மரியாவின் பெற்றோரைப்போன்று நாமும் இறைவனின் திட்டத்தை உணர்ந்து கொள்ளும் பாக்கியம் இறைவன் நமக்கு அருள்வாராக.

**ஜெபம் :**

இறைவா உமது திட்டத்தை நாங்களும், எங்களின் தினசரி வாழ்வில் கண்டுணரும் வரம் தாரும். ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

புனித சுவக்கீன், கன்னிமரியாளின் தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டதுபோல், நீங்களும் உங்கள் மாணவர்களில் இயேசுவை வளர்க்க அழைக்கப்பட்டுள்ளீர்கள். (MSF)

COMMUNICATION COMMISSION DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
ஆமோஸ் 2:6-10,13:15

பதிலுரைப்பாடல்கள்
திபா. 50:16-17,18-19,20-21,22-23

நற்செய்தி
மத்தேயு 8:18-22

அலெக்சாந்திரியா நகர் புனித சிரில்

ஜுலை 2022

**27**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

இறைமகன் இயேசு தனது விண்ணக இராஜ்ஜியத்தை மண்ணகத்தில் கண்டடைவதற்காக நம்மை அழைககிறார். இறைவனின் இராஜ்ஜியத்தை காண விரும்புவோர், விலை மதிப்பற்ற வைரத்தை தேடி கண்டுபிடித்து அடையும் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதற்கு சமம் என இயேசு கூறுகின்றார்.

இறைவனின் அரசை விண்ணகத்தில் காண நாம் காட்டும் ஆர்வம், அர்ப்பணம் மற்றும் நம்பிக்கையை பொருத்தே அமைய முடியும். நாம் இறைவனை கண்டடைய விசுவாச மறையுண்மைகளை நமதாக்க வேண்டும். இறைவனை மண்ணகத்தில் காண நம்மை சுற்றி இருக்கும் சகோதர சகோதரி என்ற வைரங்களை தேடுவோம். இறைவனின் இராஜ்ஜியத்தை காண நாம் ஆர்வமுடனும், அர்ப்பண உணர்வுடனும், பிறருடன் இறைமறை உண்மைகளை ஏற்று நம்பிக்கையுடன் அதனை கடைப்பிடிப்போம் செயல்படுவோம்.

முடிவில்லா அன்பு கொண்ட இறைவன் நம்மை ஒளிரும் விசுவாசத்திலும், மிளிர்கின்ற ஆர்வத்திலும் வழிநடத்துவாராக.

**ஜெபம் :**

இறைவா, உமது அரசினை இம் மண்ணகத்தில் பரப்பும் கருவியாக எங்களை மாற்றும், எங்களின் நல்ல எண்ணங்களாலும் எங்களின் சகோதர வாழ்வாலும், எங்களின் பணி வாழ்வாலும் உமது இம்மண்ணில் கண்டு அனுபவிக்க எங்களுக்கு கிருபை தாரும்.



**தெலசாலின் பொன்மொழி**

நேரங்களை பயனற்றதாக செலவழிப்பதை பொருட்டு எச்சரிக்கை அடையுங்கள். ஏனெனில் அவை கடவுளின் மீதான பற்றுதலைக் குறைக்கும். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA



# இறைவார்த்தையோடு
# லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

இன்றைய நற்செய்தி நமக்கு ஒரு பரிசுத்த பயத்தையும், அதே நேரத்தில் இறைவனின் நீதி தீர்ப்பையும் எடுத்துரைக்கிறது. இன்றைய காலக்கட்டத்தில் பாவம் மற்றும் பாவச் செயல்கள் அனைத்தும் சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக மாறிவிட்டது.

தனிமனித சுதந்திரம், என்ற போர்வையில் அனைத்து தவறான செயல்களையும் சரியென்று சொல்லும் நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

சிந்திப்போம் எந்த அளவுக்கு நமது பாவ வாழ்வை எதிர்க்கிறோம்?!. எந்த அளவுக்கு மனிதனை வெறுக்காமல், அவர்கள் செய்யும் செயல்களுக்கு துணை போகாமல் நீதியின் வாழ்வு வழ ஒத்துழைக்கின்றோம்?!

நமது புனிதை அல்போன்சாவைப் போன்று நாமும் நமது துன்பங்களை வென்றெடுக்கவும், மனிதத்தோடு வாழஇரக்கத்தின் இறைவன் நமக்கு அருள்புரிவாராக.

**ஜெபம் :**

இறைவா, எங்களின் பலவீனத்தை நீர் அரிவீர். நாங்கள் பாவ செயல்களால் உம்மை விட்டு விலகி செல்லாமல் எங்களின் துன்பங்களையும், சோதனைகளையும் எங்களின் ஜெபவாழ்வால் வென்றிட எமக்கு வரம் தந்தருளும் ஆமென்.

முதல் வாசகம்
எரேமியா 18:1-6

பதிலுரைப்பாடல்
திபா. 146:1-2,3-4,5-6

நற்செய்தி
மத்தேயு 13:47-53

புனித
அல்போன்சா
முட்டாத்துப்படத்து

ஜூலை 2022

**28**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC



**தெலசாலின் பொன்மொழி**

தினமும் நற்செய்தியை அறிவிப்பது உங்களின் அழைத்தலின் கடமையாகும். அதை போதிக்கும் முன்னர் நீங்கள் அதை வாழ்ந்து பாருங்கள். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
எரேமியா 26:1-9

பதிலுரைப்பாடல்
திபா. 69:4,7-9,13

நற்செய்தி
யோவான் 11:19-27

புனித மார்த்தா

ஜுலை 2022

**29**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

## சிந்தனைத் துளிகள்

இயேசு தனது ஊரைச்சுற்றியுள்ள பிற பகுதிகளில் அதிசயங்கள் பல செய்தார். ஆனால் மக்களின் மக்களின் விசுவாசம் பலவீனமாக இருந்தால் அவர், அவர்களுடைய சொந்த ஊரில் வல்ல செயல்கள் செய்யவில்லை என்பதை அறிவோம்.

ஏனெனில் மக்கள் இயேசுவின் வார்த்தைகள் தங்கள் உள்ளத்தின் ஆழத்தில் சென்று பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று விசுவசிக்கவில்லை. நாம் நமது வாழ்வைப்பற்றி சிந்திப்போம். நமது வாழ்க்கையில் இறைவனின் வல்ல செயல்கள் நடக்கின்றதா? மற்றும் நாம் நம் உள்மனதில் மாற்றங்கள் ஏற்பட இறைவனை அனுமதிக்கின்றோமா?

இறைவனிடம், நாமும் இன்றைய புனிதர்கள் மார்த்தா, மரியா மற்றும் லாசரஸ்ஸைப் போன்று இறை இயேசுவின் வார்த்தைகளை முழுமையாக விசுவசிக்கவும், நம் உள்ளத்தில் அவர் தங்கவும், அதன் வழியாக நமது வாழ்வு மாற்றம் அடையவும் தொடர்ந்து மன்றாடுவோம்.

**ஜெபம் :**

வல்லமை மிக்க இறைவா, எங்களை உம்மீது அசையாத விசுவாசத்தில் என்னும் கட்டி காத்தருளும். உமது வார்த்தைகள் எமது வாழ்க்கையிலும், மனதிலும் அரியச் செயல்கள் செய்யக்கூடிய ஆற்றலையுடையது என்ற விசுவாசம் எங்களை வழிநடத்துவதா[illegible]மென்.



**தெலசாலின் பொன்மொழி**

இயேசு கிறிஸ்துவை நீங்கள் நற்கருணையில் பெறும்போது நீங்கள் புனிதர்களைவிட மேலான மகிழ்ச்சி அடையலாம். (MSF)

COMMUNICATION COMMISSION DE LA SALLE BROTHERS - INDIA

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

## சிந்தனைத் துளிகள்

இன்றைய நற்செய்தி துயரமான நிகழ்வைப்பற்றி நமக்கு கூறினாலும் நாம் சிந்திக்கவேண்டிய முக்கியமான விஷயத்தை நமக்கு அறிவுறுத்துகிறது.

இன்றைய நற்செய்தி, கோபத்தின் உச்சக்கட்ட விளைவினை நமக்கு தெரிவிக்கிறது. நம் உள்ளத்தில் கோபத்தை தேக்கி வைப்பதாலும், வளர்ப்பதாலும் அது நம்மிடையே பொறுப்பையும், முட்டாள்தனமான செயல்களையும் செய்ய தூண்டும் என்பதற்கு இன்றைய நற்செய்தி வாசகம் எடுத்துக்காட்டு மிகச் சிறந்த உதாரணமாக இருக்கிறது.

**ஜெபம் :**

இறைவா, எங்களின் உணர்வுகள் பிறரை வாழவைக்கும் கருவியாக மாற்றும் வரத்தை எங்களுக்கு தந்தருளும். ஆமென்.

முதல் வாசகம்
எரே 26:11-16, 24

பதிலுரைப்பாடல்
திபா. 69:14-15,29-30,32-33

நற்செய்தி
மத்தேயு 14:1-12

புனித பீட்டர் கிறிசோலோகுஸ்

ஜூலை 2022

**30**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

**தெலசாலின் பொன்மொழி**

புனித மார்த்தாலைபோல இயேசுவை வீட்டிற்கு அழைத்து உணவளிக்க, நீங்கள் நற்கருணையை பெறும்போது ஆர்வமாக இருக்கிறீர்களா? (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
சஉ 1:2;2:21-23

இரண்டாம் வாசகம்
கொலோ 3:1-5,9-11

நற்செய்தி
லூக்கா 12:13-21

பொதுக்காலம்
18-ம் ஞாயிறு

ஜுலை 2022

**31**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **ஜெயக்குமார்** FSC

எவ்வகை பேராசைக்கும் இடம் கொடாதவாறு எச்சரிக்கையாய் இருங்கள். இவ்வாசகம் கொடுக்கும் செய்திதான் என்ன? பேராசை இல்லாத வாழ்வைப்பற்றி இன்று நினைத்துப் பார்க்க முடியுமா? இறைவன் கூறுவதுபோல் நமது பணியின் நிமித்தம் கிடைக்கும் பலனை சார்ந்து மட்டும் வாழமுடியுமா? சவால்கள் நிறைந்த உலகில் பயணிக்கின்ற நாம் தேவைகள் என்ற பெயரில் என்ன செய்கின்றோம். பேராசை என்று தெரியாமலே பொருட்களுக்கு அடிமையாகிறோம். மேலும் சிலர் ஏழ்மை என்றால் பொருட்களை சார்ந்ததாகவே நினைத்து வாழ்கின்றனர். ஆனால் இன்று கடவுள் நம்மை எண்ணத்திலும், பற்றுகளிலும் பேராசையை விடுத்து தூய ஆவியின் வல்லமையால் நமது மனமும், உள்ளமும் நிரப்பப்பட வேண்டும். அதன் வழியாக நமது லசாலிய பணியும், குழுமவாழ்வும் இறையருளாள் நிரப்பப்பட அனைவரையுமே நாம் எளிய மனம் கொண்டவர்களாக வாழ அழைக்கின்றோம்.

**ஜெபம் :**

எங்கள் உள்ளங்களில் தாழ்ச்சி, மற்றும் விட்டுக்கொடுத்தல் என்ற உயர்ந்த எண்ணங்கள் எங்களிடையே வளர உம்மை மன்றாடுகின்றோம்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, உங்கள் ஆன்மீக பயிற்சிகள் உங்களுக்கு நல்லதை தரும். அது உங்களுக்கு மிகவும் பயனுள்ளது. அது உங்கள் செபத்திற்கு உகந்தது. (கடிதம் 5)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA

## புனித டிலசால் வாழ்க்கைப் பயணத்தில்...

இறுதியாக நம் புனிதர் டிலசால் சகோதரர்களிடத்திலும், பள்ளி ஆசிரியர்களிடத்திலும் எவ்வெவ்வகையான நல்லதொரு அறிவார்ந்த சிந்தனைகள் மற்றுமற்றும் எண்ணங்கள் நம்மில் பிரதிபலிக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களை எடுத்துரைக்கின்றார்.

### நல்ல ஆசிரியருக்குரிய பன்னிரெண்டு வகையான நற்பண்புகள் /குணநலன்கள்

- வேண்டிய நேரத்தில் கவனத்துடன் இருத்தல்
- அமைதியைக் கடைப்பிடித்தல்
- பணிவுள்ளவராக வாழ்தல்
- விவேகமுள்ளவராக இருத்தல்
- ஞான அறிவுள்ளவராகத் திகழ்தல்
- பொறுமையை கடைப்பிடிப்பவராக இருத்தல்
- சுயக்கட்டுப்பாடுள்ளவர்களாக இருத்தல்
- பண்புள்ள மனிதராக வாழ்தல்
- பணியில் ஆர்வமுள்ளவராக இருத்தல்
- விழிப்புணர்வுள்ளராக இருத்தல்
- இறைபக்தியுள்ளவராக இருத்தல்
- தாராள குணமுள்ளவராக இருத்தல்

### நல்லாசிரியர்குரிய குணங்கள்/ நற்பண்புகள்

| | |
|---|---|
| **1. ஈர்ப்புத்தன்மை** | **Gravity** |
| **2. அமைதி** | **Silence** |
| **3. தாழ்ச்சி** | **Humility** |
| **4. விவேகம்** | **Prudence** |
| **5. ஞானம்** | **Wisdom** |
| **6. பொறுமை** | **Patience** |
| **7. அடக்கமுடைமை** | **Reserve** |
| **8. சாந்தமுள்ளம்** | **Meekness** |
| **9. ஆர்வம்** | **Zeal** |
| **10. விழிப்புணர்வு** | **Vigilance** |
| **11. பக்தி** | **Piety** |
| **12. தாராளமுள்ள குணம்** | **Generosity** |

இவ்வாறாக சகோதரர்களும், பள்ளி ஆசிரியர்களும் தங்கள் கடமை தவறாது ஆசிரியப் பணி செய்வதில் இறைவனோடு செபத்தில் இணைந்து செயல்படுவீர்கள் என்றால் உங்கள் பணியும் செயல்பாடும் திறம்பட அமையும் என்பதில் எள்ளளவும் மாற வாய்ப்பே இல்லை எனத் தெளிவாக நமது புனிதர் எடுத்துரைக்கின்றார். மேற்கண்டபடி செயலாற்றி ஆசிரியப்பணிச் சேவையில் இன்பமும் நிறைவும் அடைவீர்களாக.

... நிறைவுற்றது.

தொகுப்பித்தவர். **சகோ. ஆரோக்கியசாமி**

## ஆசிரியரின் ஜெபம்

இறைவா, எனது பலமும், பொறுமையும், ஒளியும், ஆலோசகரும் நீரே. என் கண்காணிப்பில் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களின் இதயங்களை எனக்கு பணிவுள்ளவர்களாக இருக்கச் செய்பவரும் நீரே. ஒரு மணித்துளி கூட என்னை தனினித்து செயல்பட விட்டு விடாதேயும். எனக்கும், என் மாணவருக்கும் வழிகாட்ட உமது ஞானத்தையும், புரிந்துகொள்ளும் தன்மையையும், ஆலோசனையையும், சகிப்பு தன்மையையும், அறிவுத்திறனையும், பக்தியையும், தெய்வ பயத்தையும், உன் புகழை நிலைநாட்டும் ஆவலையும் எனக்கு அளித்தருளும். என் உழைப்பை இயேசு கிறிஸ்துவோடு நான் இணைக்கின்றேன். மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட கன்னி மரியே, புனித சூசையே, காவல் தூதர்களே, ஆசிரியர்களின் பாதுகாவலரான புனித தெலசாலே எனது ஆசிரியப் பணியை செவ்வனே செய்யவேண்டிய மனவலிமையை பெற்றுத்தர தாழ்மையாய் மன்றாடுகின்றேன் –ஆமென்.

This Prayer echoes the spirituality of St. John Baptist De La Salle, who was proclaimed by the Catholic Church on May 15,1950, to be the Patron Saint of Teachers



வெளியீடு
தகவல் தொடர்பு குழு
தெலசால் சபை, இந்திய மறைப்பணித்தளம்.
இளைஞர் நகர் புல்லூத்து, நாகமலை, மதுரை – 625019

அடுத்த இதழில் ஆகஸ்ட் மாதச் சிந்தனையைத் தொகுத்து வழங்குபவர் : அருட்சகோ. **கென்னடி** FSC, தூத்துக்குடி

Lasad For India   De La Salle Bros-LASAD India   www.lasalleindia.org